**மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ரூபா 12,430,943 தொகையான இருப்புக்கள், இழிவுப் பெறுமதி ரூபா 260,539 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் கையிலுள்ள காசு ரூபா 173,727 என்பன பௌதீக ரீதியில் காணப்படவில்லை. ரூபா 12,865,209 தொகையான இந்த நட்டத்திற்காக ஏற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படாதிருந்தமையின் காரணமாக வருடாந்த / திரண்ட நட்டங்கள் அந்த அளவினால் அதிகரிக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்கள் பௌதீக ரீதியில் காணப்படாமைக்கான காரணம் மற்றும் அதற்குப் பொறுப்புவாய்ந்த நபர்களை தீர்மானிப்பதற்கு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் முகாமைத்துவத்தால் போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் நடாத்தப்படுகின்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது இது தொடர்பான நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்காக அங்கீகாரம் பெறப்படும். | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 3,688,356,619 ஆக இருந்ததுடன், அத்திகதியில் கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 3,613,356,619 மறைப் பெறுமதியைக் காட்டியது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2018 பெப்ரவரி 15 ஆம் திகதி கம்பனியை கலைப்பதற்காக பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையும் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | கம்பனியை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மையினால் அதனை விரைவாக அமுல்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் விரைவாக செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| ஹட்டன் நெஷனல் வங்கி கடன் மீதி | 4,997,452,058 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்காக மீதி உறுதிப்படுத்தல் கோரி பெறப்பட வேண்டும். |
| அரசாங்கத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 17,782,563 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்காக மீதி உறுதிப்படுத்தல் கோரி பெறப்பட வேண்டும். |
| கப்பல் எண்ணெய் காப்புறுதிக்காக கிடைக்க வேண்டிய மீதி | 28,040,453 | மூல பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் துணை ஆவணங்கள். | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த நிதிக்கூற்றுக்களுக்காக மீதி உறுதிப்படுத்தல் கோரி பெறப்பட வேண்டியதுடன் ஏனைய உரிய கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| சந்தைக் கடன்பட்டோரிடம் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 3,589,879 | மூல பதிவேடு மற்றும் துணை ஆவணங்கள். | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| செலுத்த வேண்டிய ஏனையவைகளுக்குரிய மீதி | 7,373,613 | மூல பதிவேடு மற்றும் துணை ஆவணங்கள். | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| வங்கிப் பணத்தில் கொடுப்பனவு | 34,518,489 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் துணை ஆவணங்கள். | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைகணக் காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தாய்க் கம்பனியான இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 103,666,952 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைத்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அத்திகதியில் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 73,218,272 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியில் ரூபா 30,448,680 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான விடயங்கள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. மேலும், மேற்கூறப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து அறவிட வேண்டியிருந்த டக் கப்பலுக்கான இழப்பீட்டு பணம் ரூபா 25,719,981 தொகை, முகாமைத்துவ சேவைகள் கட்டணம் ரூபா 76,547,855 மற்றும் முகாமைத்துவ கம்பனியின் வளவில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய வாகனங்களுக்காக விநியோகிக்கப்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் லீட்டர் 11,449 இற்கான ரூபா 1,399,116 தொகையான மீதிகள் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் உரிய பணம் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைத்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 73,218,272 ஆக குறிப்பிடப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது இலங்கை துறைமுக அதிகார சபையினால் எமது கம்பனிக்கு வழங்கப்பட வேண்டியதாக ரூபா 98,938,252 மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது இந்த நிலுவை பணத்தை அறவிடுவதற்காக மீள்நினைவூட்டல்கள் பலதடவை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட போதிலும் அந்த பணம் கிடைத்திருக்கவில்லை. | கலைப்பதற்கு தீர்மானத் எடுக்கப்பட்டமையால் குறித்துரைத்த பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்காக நிலுவை மீதியை பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை துறைமுக அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியிலிருந்து அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பணமாக ரூபா 5,800,921 காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனியின் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மேற்கூறப்பட்ட தொகை செலுத்த வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய முகாமைத்துவ கட்டணம் மற்றும் கம்பனியின் நானாவித சிட்டைகளை தீர்ப்பதற்காக மேற்கூறப்பட்ட தொகை அதிகார சபைக்கு கிடைக்க வேண்டியதாக காணப்பட்டது. | ரூபா 5,800,921 தொகையான இலங்கை துறைமுக அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தொகை மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடி உரிய பணம் செலுத்த வேண்டிய மீதியாக இருக்குமாயின் அதனை கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கம்பனியால் 2014 ஆம் ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு தனியார் வங்கியொன்றில் இருந்து பெறப்பட்ட ரூபா 3,144,178,059 இற்கு சமமமான ஐக்கிய அமெரிக்க டொலர் 24,002,438 கடன் தொகைக்கு உரிய கம்பனியால் 2017 ஆம் ஆண்டின் போதும், அதன் பின்னனைய ஆண்டுகளின் போதும் கடன் தவணை அல்லது வட்டித் தொகை எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 179,325,034 தொகையான வட்டித் தொகையையும் உள்ளடக்கியதாக 2021 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கடன் வட்டித்தொகை (ஐவெநசநளவ) ரூபா 1,223,952,222 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி ரூபா 4,997,452,058 இற்கு சமமமான ஐ.அ.டொலர் 24,933,180 ஆக இருந்தது. இந்த கடன் மீதி தொடர்பாக கம்பனியால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், உரிய வங்கியினால் மீதி உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மேற்கூறப்பட்ட கடன் மீதியின் சரியான தன்மை தொடர்பாக | ஏற்றுக்கொள்கின்றோம்.<br><br>செலுத்த வேண்டிய கடன் மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதம் உரிய வங்கிக்கு அனுப்பப்பட்ட போதும் வழக்கு நடவடிக்கைகள் காணப்படுகின்றமையால் வங்கியால் அந்த மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களுக்காக பதில் வழங்குதல் கைவிடப்பட்டிருந்தது. அதனால் அந்த கடன் மீதி தொடர்பான சரியான தன்மையை உறுதிப்படுத்துதல் வசதியீனமாக இருந்தது. கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பான வெளிப்படுத்தல்கள் 2022ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |

நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. மேலும், இந்த கடன் பணத்தை மீள அறவிடுவதற்காக உரிய வங்கியினால் 2020 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடீ3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2. ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி எப் (கு) வகைப்படுதத்லில் உள்ளடங்குகின்றமையினால் கம்பனியின் கட்டுப்பாட்டு சபை கூட்ட படி செலுத்துவதற்காக பரிந்துரை மற்றும் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். மேலும் சுற்றறிக்கையின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்ட ஏ (யு) முதல் ஈ (நு) வரையான வகைப்படுத்தலின் பிரகாரம் ஆகக்கூடிய கூட்டப்படியாக ரூபா 12,500 தொகை ஏ (யு) தரத்தின் அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபாரங்களுக்காக செலுத்தப்படுகின்றது. அவ்வாறு இருக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளில் இல்லாத எப் (கு) வகையின் பொதுமுயற்சியான கம்பனி 2021 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 03 கூட்டங்களுக்காக பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்காகவும் வருகைப் படியாக ரூபா 25,000 வீதம் ரூபா 425,000 தொகையும், 2020, 2019 மற்றும் 2018 ஆம் | 2020 சனவரி 13 ஆம் திகதிய சனாதிபதி சுற்றறிக்கை இலக்கம் 02.ஃ.2020 இன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்தவருக்கு ரூபா 25,000 தொகை மதாந்தம் வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் இந்தப் படி செலுத்தப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டுகளின் போது 19 கூட்டங்களை நடாத்தியதற்காக ரூபா 2,350,000 தொகையும் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட கம்பனிக்காக செலவிடப்பட்ட இந்த செலவினங்களின் பொருளியல்ரீதியில் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.8 ஆம் பிரிவு. | கம்பனி செயலாளரினால் பணிப்பாளர் சபை தீர்மானங்களின் செயல்முன்னேற்றங்களை ஆராய்ந்து பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் ஆண்டின் போது அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை. 2022 சனவரி 27 ஆம்திகதிய PAS/A/MPMC/2021/ INF/02 ஆம் இலக்க கணக்காய்வுக்காக தகவல் கோரும் கடிதத்தின் மூலம் பணிப்பாளர் சபை தீர்மானங்களின் செயல்முன்னேற்றம் கோரப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் உரிய தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். கம்பனி செயலாளருக்கு இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த தகவல்களை வழங்குதல் அந்த உத்தியோகத்தரின் பணியாகும். | பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 5,474,493 ஆக இருந்த போதும் அதில் ரூபா 2,124,954 தொகைக்குரிய வரி சான்றிதழ் கணக்காய்விற்கு | நிறுவனத்தின் கணக்குகளை தீர்த்து மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது வழங்கப்படுகின்றது. அதன் போது கம்பனியால் உள்நாட்டு இறைவரித் | உரிய மூல சான்று ஆவணங்களை சமர்ப்பித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி இறுதி தீர்மானத்திற்கு வருதல் |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் வரி சான்றிதழ் இன்மையின் காரணமாக மேற்கூறப்பட்ட கிடைக்க வேண்டிய மீதி கிடைத்தல் நிச்சியமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் விடுவிப்பு (ஊடநயசயெஉந) பெறவேண்டி இருந்தது. இந்த செயற்பாடுகளுக்காக கம்பனி 2015 முதல் 2016 வரை வரி ஆலோசணை மதியுரையாளராக செயற்பட்ட கம்பனியுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி போன்றவற்றை தீர்த்து உரிய சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | நிதியதிச் சட்ட கொடுப்பனவுகள் உரிய காலப்பகுதியின் போது தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,381,117 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி மீதி, பெறுமதிசேர் செலுத்த வேண்டிய வரி மீதி ரூபா 914,683 தொகை, ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணமாக செலுத்த வேண்டிய ரூபா 223,032 தொகை என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு கம்பனியால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரி தொடர்பாக மேற்கூறப்பட்ட 1.8(அ) இல் குறிப்பிடப்பட்ட பதில் உரித்தாகும். ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களுக்கு செலுத்த வேண்டிய பணம் தொடர்பாக கணிப்பீடுகள் மேற்கொண்டு அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான வரி மீதி மற்றும் ஏனைய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 441,980,579 நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 246,874,417 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நட்டம் ரூபா 195,106,162 இனால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேலும் நட்டமொன்று காணப்படுகின்றமைக்கு இலங்கை அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் செயல் நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு வருமானம் காணப்படாமை, கடன் அடிப்படையிலான வட்டி மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| | 2021<br>(ரூபா) | 2020<br>(ரூபா) |
|---|---|---|
| வருமானம் | - | - |
| நேர்ச் செலவினம் | - | - |
| நிர்வாக செலவினம் | (9,202,863) | (10,664,971) |
| செயற்பாட்டு இலாபம்.∴(நட்டம்) | (9,202,863) | (10,664,971) |
| தேறிய நிதிக் கிரயம் | (143,947,702) | (142,218,752) |
| அந்நிய செலாவணி நாணயமாற்று இலாபம்.∴(நட்டம்) | (288,830,015) | (93,990,694) |
| வரிக்கு முன் தேறிய இலாபம் | (441,980,579) | (246,874,417) |
| வருமான வரி | - | - |
| வரிக்குப் பின் தேறிய இலாபம் | (441,980,579) | (246,874,417) |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. இந்த கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டமையின் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கம்பனிக்கு வருமானம் கிடைத்திருக்கவில்லை.

ii. 2020 ஆம் ஆண்டில் ரூபா 93,990,694 தொகையான அந்நிய செலாவணி நாணயமாற்று நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 288,830,015 வரை 207 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

iii. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ஊழியர் சம்பளம் மற்றும் படிகளின் செலவினம் ரூபா 1,950,000 முதல் ரூபா 4,849,656 வரை 149 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. போக்குவரத்து படியை உள்ளடக்கி தலைவர் படி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் படி ரூபா 290,000 வீதம் மற்றும் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 100,000 வீதம் 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டமை மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கூறப்பட்ட படிகள் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளருக்கு 05 மாதங்களுக்காகவும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு 04 மாதங்களுக்காகவும் செலுத்தப்பட்டமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கான காரணமாக இருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| | 2021 | 2020 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1:3.40 | 1:3.40 |
| விரைவு சொத்து விகிதம் | 1:3.63 | 1:3.43 |

2020 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் முறையே 1:3.40 மற்றும் 1:3.43 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அது முறையே 1:3.40 மற்றும் 1:3.63 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மே 18 ஆம் திகதிய MPS/2021/01/11 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பின் மூலம் மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் செயற்பாட்டு நடிவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. 2021 மே 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கலந்துரையாடலின் போது அந்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அமைச்சரவை பத்திரத்திற்காக நீர் வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த அவதானிப்புக்களை கவனத்தில் கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஆலோசனை வழங்குமாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு 2021 யூலை 29 ஆம் திகதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைக்கான விளக்கமளித்தல்கள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கம்பனியின் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கம்பனிக்கு எந்தவித ஆலோசனையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கோரப்பட்ட சகல தகவல்களும் கம்பனியால் உரியவாறு வழங்கப்பட்டுள்ளமையால் மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்தல் இலங்கை துறைமுக அதிகார சபையின் பொறுப்பாகும். | அமைச்சரவை தீர்மானத்தின் பரிந்துரையின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்காக 2021 மே 18 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும் இதற்காக இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2021 நவம்பர் 16 வரை 06 மாத அளவிலான காலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் 2021 நவம்பர் 16 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் படி அமைச்சரவை தீர்மானம் எடுத்து 06 மாதங்களுக்குள் கலைப்பதற்கு மேற்கொள்ளமுடியாதிருந்தமையினால் தேவையான காலத்தை நீடித்து | ஏற்றுக்கொள்கின்றோம் இது தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சினால் 2022 ஏப்ரல் மாதம் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் மீண்டும் அமைச்சரவை பத்திரம் ஒன்று விரைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

கொள்வதற்கு மீண்டும் அமைச்சரவை தீர்மானத்தை எடுப்பதற்கு பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தால் 2022 சனவரி 05 ஆம் திகதி ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையும் எந்தவொரு அமைச்சரவை பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது கம்பனியின் ஊழியர்களுக்கு இழப்பீடு செலுத்தி நீக்கும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையினால் கொழும்பு தொழில் நீதிமன்றத்தில் தொழில்பிணக்குகள் தீர்த்தல் இலக்கம் A/37/2017 ஆம் தீர்மானம் மற்றும் 2018 பெப்ரவரி 02 ஆம் திகதிய தரப்பினர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த நிபந்தனைகளுக்கு இணங்கியதன் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 18(ஆ) இன் பிரகாரம் 2017 நவம்பர் மாதத்திற்காக நிலுவை மேலதிக நேர படி மற்றும்/ அல்லது 2018 சனவரி வரை நிலுவை சம்பளம் செலுத்த வேண்டி இருக்குமாயின் அக்கொடுப்பனவுகள் 2018 பெப்பரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியமை இணங்கப்பட்டிருந்தது. கம்பனியினால் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக கம்பனியின் செயற்பாடுகள் செயலற்று காணப்பட்ட 2017 திசெம்பர் மற்றும் 2018 சனவரி மாதங்களுக்குரிய பிரயாணச் செலவினம், தங்குமிட படிகள், செயலாற்றல் படிகள் மற்றும் வாகன படிகளாக ரூபா 12,211,073 தொகையான ஏனைய படிகள் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் | 2017 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்குப் பதிலாக 2018 நவம்பர் 12 ஆம் திகதியில் முன்னாள் தலைவரால் இது தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கமளித்தலின் பிரகாரம் இந்த ஊழியர்கள் முன்னாள் கம்பனியின் உயர் முகாமைத்துவத்தின் நடவடிக்கைகளுக்கு உரியவர்களாகும். அவர்களின் சேவை 2018.01.31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும் மீண்டும் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் ஊடாக கம்பனியின் மிகுதி வேலை நடவடிக்கைகள் முதலிய உதாரணம்: ஒட்டுமொத்த நிபந்தனைகளையும் நிறுவனத்துக்காக அமுல்படுத்துதல், கலைக்கப்படும் வரை நிதி அறிக்கைகளை பேணிச் செல்லுதல், சொத்துக்கள் கையளிக்கும் நடவடிக்கைகள், எண்ணெய் தாங்கி தொகுதியை வெறுமையாக்கி கையளித்தல், கம்பனியின் வழக்கு நடவடிக்கைகளுக்காக தொடர்புபடுதல், இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழு∴ நிதிக் குற்றவியல் புலனாய்வு | இழப்பீட்டு பணம் செலுத்தும் போது ஒட்டுமொத்த நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு முரணாக ஏதாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் உரிய கொடுப்பனவுகளுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அவற்றை மீள அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் உரிய விடயங்கள் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தியதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்காக முகாமைத்துவம் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவு போன்றவற்றின் புலனாய்வுகளுக்கு உதவி வழங்குதல் போன்றவைகளுக்காக இந்த ஊழியர்களுக்கு அவர்களின் மாதாந்த சம்பளம் செலுத்தி நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். | |
| (ஆ) | வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் யாவும் தொடர் இலக்கத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அவ்வாறே சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் கணக்காய்விற்காக பூரணப்படுத்தப்பட்டு தயார் செய்யப்பட்டு வைப்பதற்கு உறுதிச்சீட்டுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் கண்காணித்து கொள்ள வேண்டியிருந்த போதிலும் மாகம்புற துறைமுக முகாமைத்துவ கம்பனியால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட முறையே ரூபா 29,975,094 தொகைக்கும், ரூபா 4,543,395 தொகைக்கும் உரிய 123 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2022 மே 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டில் தொலைந்து போயிருந்த உறுதிச் சீட்டுக்களில் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்காக அந்த காசோலைகள் யாருக்கு உரியது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக காசோலைகளின் பிரதிகள் மற்றும் உரிய ஏனைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் செலுத்துவதற்காக இந்த காசோலைகள் மற்றும் உரிய அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை துறைமுக அதிகாரசபையில் இருந்து எடுத்துச்செல்லும் போது முறையாகவும் ஒழுங்கு முறையாகவும் மேற்கொள்ளாமையினால் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியாகத்தர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>அவ்வாறே அந்த செயற்பாடுகள் முறையாகவும் கவனமாகவும் மேற்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் தாய்க் கம்பனியினதும் வரிசை அமைச்சினதும் பொறுப்பாகும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை செயல்வழிக் கோவையினதும் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நோக்கங்களின் பிரகாரமும் பெறுகைகளின் போது மிகவும் சிறந்த வெளிப்படையான மற்றும் சிறந்த நிர்வாகம் ஒன்று | நிறுவனத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தோற்றியிருந்த சட்டத்தரணிக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. புதிய பணிப்பாளர் சபை 2021 யூலை மாத இறுதி அரைப்பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தின் போது கொழும்பு | பெறுகை நடவடிக்கைகளின் போது வெளிப்படையானதும், சிறந்த நிர்வாகத் திறமையுடனும் நடந்துகொள்ளுதல் முகாமைத்துவத்தின் |

காணப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி கண்காணித்துக் கொள்ள வேண்டிய போதிலும், கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக தோற்றியிருந்த சட்டத்தரணிகள் கம்பனிக்கு ரூபா 7,250,000 தொகையும், 2021 ஆம் ஆண்டின் போது சட்ட கம்பனிக்கு ரூபா 3,005,000 தொகையும் சட்ட செலவினமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த சட்டத்தரணியை தெரிவு செய்யும் போது வெளிப்படையான மற்றும் சிறந்த நிர்வாகத்துடனான முறைமையொன்று பின்பற்றப்பட்டமைக்கான தகவல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே உரிய சட்ட ஆலோசனைக் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட னுனுசு 1347/19 என்ற வழக்கு தொடர்பாக பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தின் போது அந்த வழக்கு வகை (னுனுசு 1347/19 வழக்காக) அனுப்பப்பட்டிருந்ததுடன் மீண்டும் கோரும் திகதியாக 2020.08.18 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் வெளிப்படையான விஷேடமான தன்மையாக வழக்கு கோரப்பட்ட ஆரம்ப தினத்திலேயே எதிர்ப்பும் கோவையிடப்பட்டிருந்தது.

அவ்வாறு இல்லையாயின் கௌரவ நீதிமன்றத்தினால் வழக்கில் கோரப்பட்டுள்ள ரூபா 4.4 பில்லியன் தொகைக்காக சட்ட ரீதியான தீர்ப்பு வெளியிடல் தீர்மானிக்கப்பட்டால் கம்பனி கடுமையான சிக்கல்களுக்கு உட்படும். அது வரையில் கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட தொகை ரூபா 1.2 பில்லியனுக்கு சமமான தொகையொன்று இருந்தமையால் ஆகும். அதன் பிரகாரம் கூடிய விரைவில் கௌரவ நீதிமன்றம் அந்த எதிர்ப்பை கோவையிடுவதற்கான தேவை ஏற்பட்டமையினால் அதற்கான காலமொன்று காணப்படாதிருந்தமையால் நம்பிக்கையான மற்றும் மிகவும் விரைவாக எதிர்ப்பினை தயாரிப்பதற்காக சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல் பிரதான தேவையொன்றாக இருந்தமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கூறப்பட்ட சட்டத்தரணி ஒருவரின் உதவி பெறப்பட்டிருந்தது. அதன் போது சட்டத்தரணிக்காக சட்டத்தரணி கட்டணம் முழு வழக்கு நடவடிக்கைகளுக்காகவும் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. மீண்டும் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை.

2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 3,005,005 நிறுவனத்தை கலைத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு நியமிக்கப்பட்ட சட்டத்தரணிக்கு செலுத்தப்பட்ட சட்டக் கட்டணம் ஆகும். அதுவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

பொறுப்பாகும்.